செ.வெ.எண் : 33/மே நாள்:27.05.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## ஜூன் 1ம் தேதி முதல் மீன்பிடிக்கச் செல்லலாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

கொரோனா நோய்த் தொற்று பரவலை கட்டுப்படுத்திடும் பொருட்டு மத்திய மற்றும் மாநில அரசுகளால் 25.03.2020 முதல் 14.04.2020 வரை 21 நாட்களுக்கு முதல் கட்டமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மொத்தம் 4 கட்டங்களாக 31.05.2020 வரை மொத்தம் 68 நாட்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அமலில் உள்ளது. இதனிடையே, இந்திய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறையின் 20.03.2020 நாளிட்ட ஆணையில் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14ம் தேதி வரையான 61 நாட்களுக்கு மீன்பிடிக்க தடைவிதித்து ஆணையிடப்பட்டது. மேற்படி ஊரடங்கு காலத்தில் விசைப்படகுகள் மீன்பிடி அனுமதி நிறுத்தி வைக்கப்பட்டு தமிழ்நாடு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்ற இந்நிலையில், தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, இந்திய அரசின் மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை தனது 25.05.2020 நாளிட்ட ஆணையில் தற்போது அமல்படுத்தப்படும் ஊரடங்கு காலத்தினை கருத்தில் கொண்டு, இந்தியாவின் கிழக்கு கடற்கரை பகுதியில் ஏப்ரல் 15 முதல் மே 31ம் தேதி வரையான 47 நாட்களுக்கு மட்டும் மீன்பிடித் தடைக்காலம் அமல்படுத்தப்படும் என்ற திருத்திய ஆணையை வெளியிட்டுள்ளது.

மேற்படி ஆணைகளின்படி, கொரோனா நோய் கட்டுப்பாடு காரணமாக மீன்பிடி தடைக்காலம் தொடர்பாக தொழில் நிறுத்தம் செய்துள்ள கிழக்கு கடற்கரைக்குட்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள விசைப்படகுகளுக்கு 61 நாட்களிலிருந்து 47 நாட்களாக மீன்பிடி தடைக்காலம் குறைக்கப்பட்டதன் காரணமாக அப்பகுதி மீனவர்கள் ஜூன் 1ம் தேதி முதல் மீன்பிடிக்கச் செல்லலாம். இதன் மூலம் தமிழ்நாட்டின் விசைப்படகு உரிமையாளர்களுக்கும் மீன்பிடி தொழிலை நம்பியுள்ள ஆயிரக்கணக்கான மீன்பிடி தொழிலாளர்களும், மீன்பிடி தொழிலை சார்ந்துள்ளவர்களும் பயன்பெறுவார்கள்.

மேலும், கொரோனா பாதிப்பை தடுக்கும் வகையில் முகக்கவசம் அணிந்தும், சமூக இடைவெளி விட்டும், கொரோனா எச்சரிக்கை தொடர்பாக அரசு அவ்வப்போது அறிவிக்கும் விதிமுறைகளை கடைபிடித்து மீன்பிடி தொழில் செய்ய விசைப்படகு உரிமையாளர்களுக்கும், மீன்பிடி தொழிலாளர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**